இண்டஸ்இண்ட் பேங்க் - உங்கள் நிதியியல் பார்ட்னர்.
மிகச் சிறந்த சேவைகளை வழங்கியும், நீண்ட கால உறவுமுறையைப் பேணியும் வாடிக்கையாளர்களின் தேவைகளை புதுமையான தீர்வுகள் மற்றும் தேவைகளைப் புரிந்து கொண்ட ஆற்றலுடன் விரைந்து நிறைவேற்றிக்கொடுத்து இண்டஸ்இண்ட் பேங்க் வாடிக்கையாளர்களின் வெற்றிகளில் பெரும் பங்காற்றி வருகிறது.

## கூடுதல் விவரங்களுக்கு:

- எங்கள் வங்கி கிளைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்
- 24 மணி நேர போன் பேங்கிங் எண்ணில் 1860 267 7777 தொடர்பு கொள்ளுங்கள்
- இணையதளத்திற்கு வாருங்கள் www.indusind.com
- மின்னஞ்சல் முகவரியில் எழுதுங்கள்: premium.care@indusind.com

கவனிக்கவும்: இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்கள் மாற்றங்களுக்கு உட்படுபவை, இண்டஸ்இண்ட் பேங்கி-ன் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் அவை மேற்கொள்ளப்படும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும்.

Back

IndusInd Bank

# இண்டஸ்இண்ட் பேங்க் கிரிடிட் கார்ட்
# மிக முக்கிய வரையறைகள் & நிபந்தனைகள்



Cover

## மிக முக்கிய வரையறைகள் & நிபந்தனைகள் இண்டஸ்இண்ட் பேங்க் கிரிடிட் கார்டுகள்

இந்த மிக முக்கிய வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் (எம்ஐடிசி) மற்றும் இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்து தகவல்களும் கிரிடிட் கார்டுகள் / கார்டுதாரர்கள் / கிரிடிட் கார்டு விண்ணப்பதாரர்கள் / வங்கி வாடிக்கையாளர்கள் / பொதுமக்கள் ஆகிய அனைவருக்கும் வங்கியின் கிரிடிட் கார்ட் புராடெக்டில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கும் போது நடப்பு தேதியிலிருந்து அவர்களுக்குப் பொருந்தும். இந்த எம்ஐடிசி மாற்றங்களுக்கு உட்பட்டவை. இந்த எம்ஐடிசி விதிமுறைகளை கார்டுதாரர் வங்கியுடன் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் மற்றும் அதனுடன் கூடுதலாகப் படித்து பொருந்துவதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## கட்டணங்கள் மற்றும் செலவுகள்

செலவுகள் அட்டவணை

| கட்டணங்கள்* | சேர்க்கை கட்டணம் | ஆண்டு கட்டணம் | கூடுதல்-சேர் (ஆட் ஆன்) கட்டணம் |
|---|---|---|---|
| பிளாடினம் ஆரா | ₹500 | இல்லை | இல்லை |
| பிளாடினம் ஆரா எட்ஜ் | ₹500 | இல்லை | இல்லை |
| பிளாடினம் செலக்ட் | ₹999 | இல்லை | இல்லை |
| பிளாட்டினம் | ₹3000 | இல்லை | இல்லை |
| ஐகோனியா | ₹3500 | இல்லை | இல்லை |
| டுயோ | ₹249 | இல்லை | இல்லை |
| லெஜெண்ட் | ₹9999 | இல்லை | இல்லை |
| பினாகிள் | ₹12999 | இல்லை | இல்லை |
| இன்டர்மைல்ஸ் இண்டஸ்இண்ட் பேங்க் ஒடிஸ்ஸி கிரிடிட் கார்ட் | ₹10000 | ₹4000 | இல்லை |
| இன்டர்மைல்ஸ் இண்டஸ்இண்ட் பேங்க் வொயேஜ் கிரிடிட் கார்ட் | ₹2000 | ₹2000 | இல்லை |



## மற்ற நிதியியல் செலவுகள்

| வட்டி கட்டணம் | மாதாந்திர வீதம் | ஆண்டு வீதம் |
|---|---|---|
| பிளாடினம் ஆரா, பிளாடினம் ஆரா எட்ஜ், கிரிடிட் கார்ட், கிரிடிட் (15-டிசம்பர்-2022 தேதி முதற்கொண்டு) | 3.95% | 47.40% |
| மற்ற கார்டுகளுக்கு | 3.83% | 46% |
| வட்டியில்லாத காலவரை | வட்டியில்லாத காலவரை 50 நாட்கள்; ஒருவேளை நிலுவை தொகை முழுவதும் செலுத்தாவிட்டால் வட்டியில்லாத காலவரை பொருந்தாது | |
| கெடு கடந்து தொகை செலுத்தும் கட்டணம் | நிலுவை இருப்பு (30-செப்டம்பர்-2020 வரை)<br>₹100 வரை – இல்லை<br>₹101- ₹500 – ₹100<br>₹501- ₹1000 – ₹350<br>₹1001- ₹10000 – ₹550<br>₹10000-க்கு மேல் – ₹700 | நிலுவை இருப்பு (01-அக்டோபர்-2020 தேதி முதற்கொண்டு)<br>₹100 வரை – இல்லை<br>₹101 முதல் ₹500 – ₹100<br>₹501 முதல் ₹1,000 – ₹350<br>₹1001 முதல் ₹10,000 – ₹550<br>₹10,001 முதல் ₹25,000 – ₹800<br>₹25,001 முதல் ₹50,000 – ₹1100<br>₹50,000 -க்கு மேல் – ₹1300 |
| மேல் வரம்பு கட்டணங்கள் | வரம்பு கடந்த தொகை மீது 2.5% குறைந்தபட்ச கட்டணம் ₹500 | |
| திருப்பப்பட்ட காசோலை | ₹250 | |
| வெளியூர் காசோலை பரிசீலனை கட்டணம் | வெளியூர் காசோலைகள் இண்டஸ்இண்ட் பேங்க் மீது வரையட்டப்பவை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் | |
| ரொக்கம் எடுத்தக் கட்டணங்கள் | எடுக்கப்பட்ட தொகை மீது 2.5% குறைந்தபட்ச கட்டணம் ₹300 (லெஜண்ட் கிரிடிட் கார்டுகளுக்குத் தளர்த்தப்படும்) | |
| இண்டஸ்இண்ட் பேங்க் அல்லாத ஏடிஎம்களில் இருப்பு விசாரணை கட்டணங்கள் | ₹25 | |
| ஏடிஎம்களில் மெஷின் உபகட்டணம் | பொருந்தும் வீதங்களில் வாடிக்கையாளரிடம் வசூலிக்கப்படும் | |
| அன்னிய செலாவணி சந்தை ஏற்ற விலை | 3.5% அனைத்து கிரிடிட் கார்டுகள் மீது*<br>*இண்டஸ்இண்ட் பேங்க் லெஜெண்ட் கிரிடிட் கார்ட் - 1.8% (இந்திய அரசு, நிதி அமைச்சகம் அறிவித்திருக்கும் நடப்பு வீதத்தில் ஜிஎஸ்டி பொருந்தும்) | |

அமெரிகன் எக்ஸ்பிரஸ் மாற்றிக்கொடுக்கும் அன்னிய கட்டணங்களுக்கு, அமெரிகன் எக்ஸ்பிரஸ் மாற்றிக்கொடுக்கப்பட்ட தொகை மீது 3.5% வீதத்தில் மாற்றிக்கொடுக்கும் கட்டணம் வசூலிக்கும், இதில் 1.5% அமெரிகன் எக்ஸ்பிரஸ் வைத்துக்கொள்ளும், அல்லது நாங்கள் தீர்மானித்து உங்களுக்கு அறிவிக்கும் வீதமாக இருக்கும். யூஎஸ் டாலர் அல்லாத அன்னிய செலாவணியில் கட்டணம் வசூலிக்கப்படும், அமெரிகன் எக்ஸ்பிரஸ் மாற்றிக்கொடுக்கும் சமயத்தில் உங்களுக்கு பில் செய்யப்படுவதற்கு முன்னர் அந்த தொகை யூஎஸ் டாலராக முதலில் மாற்றிக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| ரயில்வே புக்கிங் சர்சார்ஜ் | பொருந்துவது போல் |
| சேவிங்க்ஸ் பிளான் மாற்றம் (இண்டஸ்இண்ட் பேங்க்ற்காக) பிளாடினம் ஆரா, பிளாடினம் ஆரா எட்ஜ் கிரிடிட் கார்ட் மற்றும் இண்டஸ்இண்ட் பேங்க் கோல்ட் கிரிடிட் கார்ட்) | ₹250 |
| ஃபூயல் சர்சார்ஜ் (குறைந்தபட்சம் ரூ,10 க்கு உட்பட்டது) | 1% (₹400 - ₹4000 வரையிலான நடவடிக்கைகளுக்கு தளர்த்தப்படும்.) (ஃபூயல் சர்சார்ஜ் மீது வழக்கமான வீதத்தில் வசூலிக்கப்படும் ஜிஎஸ்டி கட்டணங்களை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்) |
| இண்டஸ்இண்ட் பேங்க் கிளைகளில் ரொக்கம் பேமென்ட் கட்டணம் | ₹100 |
| ஜிஎஸ்டி | நிதி அமைச்சகம், இந்திய அரசு அறிவித்திருக்கும் நடப்பு வீதத்தில் |
| நகல் அச்சடித்த அறிக்கை கோரிக்கை | ₹100 பிரதி அறிக்கை (கடந்த 3 மாதங்களுக்கு முந்தியது) |
| மீண்டும் வழங்குதல் / பதிலுக்கு ஒன்று வழங்குதல் | ₹100 |
| சார்ஜ்-ஸ்லிப் கோரிக்கை | ₹300 |
| பிரையாரிடி பாஸ் லவுஞ்சுகள் | US$27 வரை பிரதி நபர் பிரதி வருகைக்கு |
| வெகுமதிகள் மீட்பு கட்டணம் 1 நவம்பர், 2020 முதல் | ₹100 |

**வாடிக்கையாளர் விண்ணப்பம் செய்துகொள்ளும் சமயத்தில் இந்த பொருந்தும் கட்டணங்கள் / செலவுகள் அவருக்குத் தெரிவிக்கப்படும்.**

**இந்த கட்டணங்கள் வாடிக்கையாளருக்கு அனுப்பப்படும் முதல் மாதாந்திர பில்லில் சேர்க்கபட்டுவிடும். வங்கியின் சொந்த விருப்பத்தை அனுசரித்து கட்டணங்கள் அவ்வப்போது மாற்றியமைக்கப்படும்.**



**அறிக்கை அனுப்பப்படும் கால இடைவெளி: மாதந்தோறும் 25ந் தேதி**

| வகை | நடவடிக்கை தேதி | தொகை |
|---|---|---|
| ஷாப்பர்'ஸ் ஸ்டாப் | 14-ஜனவரி- 2011 | ₹10,000 |
| பேமென்ட் பெற்றுக்கொள்ளப்பட்டது | 10-பிப்ரவரி-2011 | ₹7,000 |

வட்டி கணக்கிடப்படும் உதாரணம்: கெடு தேதியில் முழு தொகையும் செலுத்தப்படும் போது வட்டி எதுவும் விதிக்கப்பட மாட்டாது. மேலேயுள்ள உதாரணத்தில், 25-பிப்ரவரி-2011 தேதியிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு வட்டி வசூலிக்கப்படும்.

| வகை | நடவடிக்கை தேதி | நிலுவை இருப்பு | தேதி வரை | நாட்கள் | வட்டி வீதம் | வட்டி |
|---|---|---|---|---|---|---|
| ஷாப்பர்'ஸ் ஸ்டாப் | 14-ஜனவரி- 2011 | ₹10000 | 25-ஜனவரி-2011 | 11 | 3.83% மா.ஒ. / 46% ஆ.ஒ. / | 138.63 (11/365 நாட்கள்* 46%* ₹10,000) |
| 25-ஜன-11 தேதியில் ஆரம்ப இருப்பு | | ₹10000 | 10-பிப்ரவரி-2011 | 16 | 3.83% மா.ஒ. / 46% ஆ.ஒ. / | 138.63 (11/365 நாட்கள்* 46%* ₹10,000) |
| ₹,000 பேமென்ட் தேதி 10-பிப்-11 | 10-பிப்ரவரி-2011 | ₹3000 | 25-பிப்ரவரி-2011 | 15 | 3.83% மா.ஒ. / 46% ஆ.ஒ. / | 138.63 (11/365 நாட்கள்* 46%* ₹10,000) |
| செலுத்த வேண்டிய மொத்த வட்டி | | | | | | ₹396.98 |

கவனிக்கவும் - மேலேயுள்ள உதாரணத்தில் பிரதி மாதம் 3.83% வீதம் வட்டி கணக்கிடப்பட்டுள்ளது.

கார்டுதாரர் தினப்படி பராமரிக்கும் நிலுவை தொகை மீது வட்டி கணக்கிடப்பட்டுள்ளது. கெடு தேதியில் நிலுவை தொகை முழுவதும் செலுத்தப்படாத போது வட்டி வசூலிக்கப்படும். திரண்டுள்ள வட்டி மீதும் வட்டி விதிக்கப்படும். ரொக்கம் எடுக்கப்பட்ட தொகை மீது எடுக்கப்பட்ட தேதியிலிருந்து தொகை திருப்பிச் செலுத்தப்படும் தேதி வரையில் வட்டி வசூலிக்கப்படும். ஆரம்பத்தில் 3.83% மா.ஒ. வீதம் (46% ஆ.ஒ.) வட்டி வசூலிக்கப்படும். வாடிக்கையாளரின் கடன் வரலாறு, கொள்முதல் செய்யும் பாங்குகள், பேமென்ட் நடத்தை, லாயல்டி மற்றும் அவருடைய வரவு வளங்கள் அடிப்படையில் ஆனால் இவை மட்டுமே அல்லாத காரணிகளைச் சீர்தூக்கிப் பார்த்து வங்கி அதன் சொந்த விருப்பப் படி வட்டி வீதத்தை மாற்ற முடியும். வட்டி கட்டணங்கள் நடப்பு முறையை அனுசரித்திருக்கும் என்றாலும், இண்டஸ்இண்ட் பேங்க் அவ்வப்போது மேற்கொள்ளும் மறுசீராய்வு அடிப்படையில் அவை மாற்றமடையக் கூடும்.

## கடன் மற்றும் ரொக்கம் எடுக்கும் வரம்புகள்

- கடன் வரம்பு: கார்டுதாரருக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் உச்ச வரம்பு இது. நீங்கள் செய்யும் நடவடிக்கைகள் அனைத்தும், கட்டணங்கள் செலவுகள் உட்பட இந்த வரம்பை மீறாமல் இருக்க வேண்டும்.
- ரொக்கம் வரம்பு: கார்டுதாரருக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் உச்ச ரொக்கம் வரம்பு இது. ஒட்டுமொத்த கடன் வரம்பில் இது உட்கணம் என்பதால் இதன் அளவு குறைவாக இருக்கும்.
- கிடைக்கும் கடன் வரம்பு: கிடைக்கும் கடன் வரம்பு என்பது எந்த ஒரு கட்டத்திலும் சம்பந்தப்பட்ட கார்டுக்கு அனுமதிக்கப்பட்ட கடன் வரம்பிலிருந்து நிலுவை இருப்பு கழிக்கப்பட்ட தொகையாக இருக்கும்.
- கிடைக்கும் ரொக்கம் வரம்பு: கிடைக்கும் ரொக்கம் வரம்பு என்பது எந்த ஒரு கட்டத்திலும் சம்பந்தப்பட்ட கார்டுக்கு அனுமதிக்கப்பட்ட ரொக்கம் வரம்பிலிருந்து நிலுவை ரொக்கம் இருப்பு கழிக்கப்பட்ட தொகையாக இருக்கும்.
- கடன் மற்றும் ரொக்கம் வரம்புகள் ஒவ்வொரு கார்டுதாரருக்கும் வேறுபட்டிருக்கும், கார்டுதாரருக்கு மாதந்தோறும் அனுப்பப்படும் அறிக்கையில் இது தெரிவிக்கப்படும்.

## பில்லிங் & அறிக்கை

- கார்டுதாரருக்கு மின்னஞ்சல் மற்றும் / அல்லது அச்சடித்த மாதாந்திர அறிக்கையை வங்கி அனுப்பி வைக்கும், இது ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட முறையில் ஒவ்வொரு பில்லிங் காலவரைக்கு அந்த காலக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் / ரொக்கம் எடுத்தல் விவரங்களுடன் கார்டு கணக்கில் நிலுவை தொகையைத் தெரிவித்து வங்கி அனுப்பி வைக்கும்,
- ஒருவேளை அறிக்கை கிடைக்கப்பெறவில்லை என்றாலும் கூட இந்த ஒப்பந்தத்தின் கீழ் கார்டுதாரரின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் பாதிப்படையாது என்பதுடன் அவர் / அவள் நிலுவை தொகையை, குறைந்தபட்ச தொகையையாவது, பேமென்ட் கெடு தேதி முடிவதற்குள் வங்கிக்குச் செலுத்திவிட வேண்டும்.
- மொத்தம் செலுத்த வேண்டிய தொகையின் குறைந்தபட்ச நிலுவைத் தொகை 5% ஆக கணக்கிடப்படுகிறது அல்லது அத்தகைய மற்ற தொகை இன்டஸ்இண்ட் பேங்க் தனது சொந்த விருப்புரிமையின் பேரில் தீர்மானிக்கப்படலாம். ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச தொகை மட்டும் செலுத்தினால். பரிவர்த்தனை தேதியிலிருந்து அடுத்தடுத்த பரிவர்த்தனைகளுக்கும் வட்டி விதிக்கப்படும் என்பதை தயவுசெய்து அறியவும். மேலும் உங்கள் நிலுவைத் தொகையின் மீதான வட்டி செலுத்துதலின் விளைவாக ஒரு குறிப்பிட்ட காலத்தில் திருப்பிச் செலுத்துவற்கான காலமும் நீட்சி அடைகிறது. உதாரணமாக மாதம் ஒன்றுக்கு 3.83%-ல் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச நிலுவைத் தொகை (குறைந்தபட்ச நிலுவைத் தொகை குறைந்தது ரூ.500) மட்டுமே செலுத்தினால் ஆரம்ப வாங்கிய தொகையை ரூ.10,000 செலுத்த 38 மாதங்கள் எடுத்துக்கொள்ளலாம்.
- அறிக்கை கிடைக்காத தகவல் அல்லது மாதாந்திர அறிக்கையில் காணப்படும் பிழைகள், ஏதாவது இருந்தால், அவற்றை பில்லிங் அறிக்கை தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கார்டுதாரர் வங்கிக்குத் தெரிவிக்க பொறுப்பேற்றுக்கொள்கிறார் என்பதை கார்டுதாரர் ஏற்றுக்கொள்கிறார். ஒருவேளை கார்டுதாரர் இவை எதையும் வங்கிக்குத் தெரியப்படுத்தவில்லை எனும் போது, அனுப்பப்பட்டிருக்கும் அறிக்கை அவரிடம் சேர்க்கப்பட்டுவிட்டது என்றும் அது முடிவானது என்றும் கருதப்படும்.



- பணம் செலுத்த வேண்டிய கடைசி நாளுக்கு முன்பாக குறைந்தபட்ச நிலுவைத் தொகை (தசமங்கள் ஏதேனும் இருந்தால் உட்பட சரியான தொகை) செலுத்தப்படாவிட்டால் தாமத கட்டணங்கள் விதிக்கப்படும். பணம் செலுத்தாதபட்சத்தில் அல்லது குறைந்தபட்ச நிலுவைத் தொகை விட குறைவாக செலுத்தும் நிலையிலும் கூட தாமத கட்டணங்கள் விதிக்கப்படும்.

## பேமென்ட் செய்யும் வழிமுறை

பேமென்டுகள் அனைத்தையும் இந்திய ரூபாயில் மட்டுமே செலுத்த வேண்டும். கீழ்க்கண்ட வழிமுறைகளில் கார்டுதாரர் பேமென்ட் செய்யும் வசதிகளைப் பெற்றிருப்பார்:

1. ‘ஸ்விப்ட் பே’ ஆப்ஷன் www.indusind.com மூலம் ஒரு வங்கிக் கணக்கிலிருந்து தொகை செலுத்தலாம்
2. NEFT/RTGS/Visa Money Transfer மூலமாக இண்டஸ்இண்ட் பேங்க் அல்லாத கணக்கு ஒன்றிலிருந்து ஆன்லைனில் தொகை செலுத்தலாம்
3. காசோலை / வங்கி வரைவோலையில் இண்டஸ்இண்ட் பேங்க் கிரிடிட் கார்டு எண். XXXXXXXXXXXXXXXX எழுதி இண்டஸ்இண்ட் பேங்க் கிளைகள் / ஏடிஎம்களில் டெபாசிட் செய்யலாம். பேமென்ட் கெடு தேதிக்கு 4 வேலை நாட்களுக்கு முன்னதாக காசோலைகளை டெபாசிட் செய்ய வேண்டும் என்று உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது, இதனால் உங்கள் கார்டு கணக்கில் காலா காலத்தில் தொகை வரவு வைக்கப்பட்டு தண்டம் கட்டணம் வசூலிக்கப்படுவதைத் தவிர்க்க முடியும். காசோலையின் பின்புறத்தில் உங்கள் மொபைல் எண்ணை அவசியம் எழுதுங்கள், உங்கள் காசோலை கிடைத்த விவரத்தை எஸ்எம்எஸ் மூலமாகத் தெரிவிக்க இது உதவும்.
4. இண்டஸ்இண்ட் பேங்க் கிளை ஒன்றில் ரொக்கம் டெபாசிட் செய்தல்.
5. உங்கள் இண்டஸ்இண்ட் பேங்க் கணக்கில் ஆட்டோ பேமென்ட் வசதியை இயக்கி அல்லது இண்டஸ்இண்ட் பேங்க் தவிர்த்த வேறு வங்கிக் கணக்கில் NACH வசதியை இயக்கி பேமென்ட் செய்யலாம். கூடுதல் விவரங்களுக்கு போன் பேங்கிங்-வுடன் தொடர்பு கொள்ளுங்கள். கார்டு கணக்கு நிலுவை தொகைக்குச் செலுத்தப்படும் பேமென்டுகள் கிடைக்கப்பெற்றவுடன் அவை அனைத்து இஎம்ஐக்கள், வரிகள், கட்டணங்கள், இதர பிற செலவுகள், வட்டி கட்டணங்கள், ரொக்க கடன் அளிக்கப்பட்டது மற்றும் கொள்முதல் நடவடிக்கைகள் என்ற வரிசையில் வரவு வைக்கப்படும்.

## தொடர்பு வழிமுறைகள்

- கார்டுதாரருக்கு ஏற்படும் சந்தேகங்கள், கேள்விகள் மற்றும் / அல்லது குற்றச்சாட்டுகளுக்கான நிவாரணங்கள் ஆகியவற்றை கீழே கொடுக்கப்பட்டிருக்கும் தகவல் வழிமுறைகள் ஒன்றின் மூலமாக கார்டுதாரர் பெற முடியும்.

1. 24 மணி நேர போன் பேங்கிங் நம்பர்: 18602677777
2. மின்னஞ்சல்: premium.care@indusind.com

3. வங்கியின் கிரிடிட் கார்ட் பிரிவுக்கு எழுதி தெரிவிக்கலாம்: இண்டஸ்இண்ட் பேங்க் லிமிடெட் (கிரிடிட் கார்டு பிரிவு), தபால் பெட்டி 9241, சக்காளா, எம்ஐடிசி, அந்தேரி (கி), மும்பை - 400 093.

4. தீர்க்கப்பட்டிருக்காத குற்றச்சாட்டுகளுக்கு, இங்கே எழுதுங்கள்: கார்டு சேவைகள் தலைமை, இண்டஸ்இண்ட் பேங்க் லிமிடெட் (கிரிடிட் கார்டு பிரிவு), தபால் பெட்டி 9241, சக்காளா, எம்ஐடிசி, அந்தேரி (கி), மும்பை-400 093 அல்லது மின்னஞ்சல் முகவரியில்: head.cardservices@indusind.com.

   ஒருவேளை தலைமை கார்டு சேவைகளிடமிருந்து உங்களுக்கு 7 நாட்களுக்குள் பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றால், கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்: இண்டஸ்இண்ட் பேங்க் லிமிடெட், 701, சாலிடெய்ர் கார்பொரேட் பார்க், 167, குரு ஹர்கோவிந்த்ஜி மார்க், அந்தேரி - காட்கோபர் லிங்க் ரோடு, சக்காளா, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400 093.

   மின்னஞல்: nodal.officer@indusind.com

   நீங்கள் எங்களுக்கு அனுப்பும் தபால் அனைத்திலும் உங்கள் இண்டஸ்இண்ட் பேங்க் கிரிடிட் கார்ட் எண்ணை அவசியம் குறிப்பிட வேண்டும்.

## தவணை தவறுதல்

- தவணை தவறும் போது, கார்டுதாரருக்கு இண்டஸ்இண்ட் பேங்க் பிரதிநிதிகளும், கிரிடிட் கார்ட் கணக்கில் நிலுவை தொகையை வசூலிக்க இண்டஸ்இண்ட் பேங்க் நியமித்திருக்கும் மூன்றாம் நபர்களும் தபால், தொலைநகல், தொலைபேசி, மின்னஞ்சல், எஸ்எம்எஸ் செய்திகளை அவ்வப்போது அனுப்பி கணக்கை நேர் செய்ய நினைவூட்டல் தகவல்களை அனுப்புவார்கள் மற்றும்/அல்லது அவர்கள் பிரதிநிதிகளை அனுப்பி நிலுவை தொகையை வசூலிக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். இவ்வாறு நியமிக்கப்படும் மூன்றாம் நபர் கடன் வசூலிக்கும் நடவடிக்கைகளில் அவ்வப்போது பொருந்தும் நன்னெறி நடத்தைகளைப் பின்பற்றுவார்கள்.

ஒருவேளை கார்டுதாரர் தவணை தவறும் போது, வங்கி அதன் சொந்த முடிவுகளை அனுசரித்து கீழ்க்கண்ட உரிமைகளைப் பெற்றிருக்கும்:

- கார்டுதாரருக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் அனைத்து கிரிடிட் கார்ட் வசதிகளை நிறுத்தி வைத்தல்.
- கார்ட் கணக்கில் இருக்கும் நிலுவை தொகையை உடனடியாகத் திருபொபிச் செலுத்த கேட்டுக்கொள்ளுதல்.
- வங்கி பற்றுடைமை அதிகாரத்தைப் பயன்படுத்தி கார்டுதாரர் பெயரில் வங்கியிடமிருக்கும் தொகைகள் / டெபாசிட்டுகள் / கணக்குகளிலிருந்து நிலுவைத் தொகையை வசூலித்துக்கொள்ளும்.
- வங்கி சரி என்று கருதுவது போல் இந்த தனிப்பட்ட நிகழ்வில் தன் பற்றுடைமை / ஈடு செய்யும் நடவடிக்கை மூலமாக நிலுவை தொகையை வசூலிக்க சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
- கார்டுதாரருக்கு எந்த முன்னறிவிப்பும் செய்யாமல், இரகசியக்காப்பு கொள்கையின் கீழ் இந்திய ரிசர்வ் வங்கி அல்லது ஆணையம் ஒன்றிற்கு, சியம் கிரிடிட் பியுரோ அல்லது அரசு ஆணையம் அல்லது வேறொரு அமைப்பு / நபருக்கு கார்டுதாரரின் அடையாளம் மற்றும் கார்டுதாரர் தவணை தவறும் நடவடிக்கை ஒன்று செய்துவிட்டார் என்பதைத் தெரிவித்தல்.



தவணை தவறிய அறிக்கையை வங்கி அதன் சொந்த விருப்பத்தின் படி திரும்பப்பெற்றுக்கொள்ள, கீழ்க்கண்ட நிகழ்வுகளில், உரிமை பெற்றிருக்கும்:

- சம்பந்தப்பட்ட தவணை தவறியவர் வங்கிக்குச் செலுத்த வேண்டிய நிலுவை தொகைகள் அனைத்தையும் செலுத்திவிட்டார் அல்லது வங்கியுடன் கணக்குகளை நேர் செய்துவிட்டார்.
- வங்கிக்கு எதிரான அல்லது வங்கி தொடுத்திருக்கும் நீதிமன்ற வழக்கு ஒன்றிலிருந்து கார்டுதாரர் பெயரை பட்டியலிலிருந்து எடுத்துவிட நீதிமன்ற ஆணை ஒன்று கிடைக்கப்பெற்றிருத்தல். ஒவ்வொரு நிகழ்வுகளையும் மீளாய்வு செய்து அந்தந்த நிகழ்வுகளைப் பொருத்து தீர்மானங்கள் செய்யப்படும்.
- கார்டுதாரர் ஒருவேளை மரணமடைய நேர்ந்தால் அல்லது நிரந்தர இயலாமைக்கு உட்பட்டுவிட்டால், இண்டஸ்இண்ட் பேங்க் தன் சொந்த விருப்பத்தின் பேரில் மற்றும் சட்டரீதியாகக் கிடைக்கும் வழிமுறைகளைப் பயன்படுத்தி கார்டுதாரரின் வாரிசுகள் /நிறைவேற்றுபவர்கள் / நிர்வாகம் செய்பவர்களிடமிருந்து கார்டுதாரர் கார்டு கணக்கிலிருக்கும் நிலுவைத் தொகையை வசூலிக்க, தொகை, பொருந்தும் காப்பீடு ஏற்பாடுகள் ஆகியவற்றை வசூலிக்க அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றும் உரிமையை இண்டஸ்இண்ட் வங்கி தன்னிடம் தக்க வைத்துக்கொள்கிறது.

## கார்டுதாரர் வசதிகளை நீகுதல் / பின்னறவு செய்தல்

- கார்டுதாரர் எப்பொழுது வேண்டுமானாலும் இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய எழுத்து மூலமாக அல்லது இண்டஸ்இண்ட் பேங்க் போன் பேங்கிங் பிரிவுடன் தொடர்புகொண்டு கிரிடிட் கார்டுடன் சம்பந்தப்பட்ட அனைத்து வசதிகளையும் நன்மைகளையும் முடித்துக்கொள்ள கோரிக்கை செய்துகொள்ளலாம்.
- சம்பந்தப்பட்ட கிரிடிட் கார்ட் கணக்கில் நிலுவை தொகை அனைத்தும் திருப்பிச் செலுத்தப்பட்ட பிறகே கிரிடிட் கார்ட் கணக்கு ரத்து முழுமை அடையும்.
- முன்னறிவிப்பு எதுவும் கொடுக்காமல் வங்கி தன் சொந்த முடிவுகளை அனுசரித்து கிரிடிட் கார்ட் வசதியை எப்பொழுது வேண்டுமானாலும் உடனடியாக நிறுத்தும் அல்லது எப்பொழுது வேண்டுமானாலும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் உரிமையை வங்கி தன்னிடம் வைத்திருக்கும். வங்கி கிரிடிட் கார்டு வசதியை நிறுத்தி வைக்கும் போது, கிரிடிட் கார்ட் கணக்கில் நிலுவையிலிருக்கும் தொகை அனைத்தும் (கட்டணங்கள் அல்லது ரொக்கம் அளிக்கப்பட்டவை மற்றும் இது வரை கணக்கில் பற்று வைக்கப்படாதவை உட்பட) உடனடியாகத் திருப்பிச் செலுத்திவிட வேண்டிய தொகையாகக் கருதப்படும். இது போன்ற சமயங்களில், வங்கி பதிவேடுகளில் இருக்கும் தரவுகள் படி கிரிடிட் கார்ட்/பின் நம்பர் பயன்படுத்தி கார்டுதாரர் ரொக்கம் எடுத்திருக்கும் தொகைகள் / டிரான்ஸ்ஃபர் நடவடிக்கைகள் அனைத்தும் கார்டு கணக்கில் பற்று வைக்க கார்டுதாரரின் மாற்றவியலாத அங்கீகாரம் வங்கி பெற்றிருக்கும்.
- ஒருவேளை கார்டுதாரர்(கள்) கிரிடிட் கார்டை ஒருபோதும் பயன்படுத்தியிருக்காவிட்டால் அல்லது 90 நாட்களுக்கும் மேலாக பயன்படுத்தியிருக்காவிட்டால், அனைத்து ஆதாயங்களும் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படலாம். ஆதாயங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்வதைக் குறித்த முன்னறிவிப்பு சம்பந்தப்பட்ட கார்டுதாரர்(களுக்கு) தெரிவிக்கப்படும்.

## கார்டு தொலைந்து / திருட்டு போதல்

- கார்டை பத்திரமாக வைத்திருக்கும் பொறுப்பு கார்டுதாரருடையது என்பதால் அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கார்டுதாரர் மேற்கொள்ள வேண்டும்.
- ஒருவேளை கார்டு தொலைந்து போகுமானால், இது சம்பந்தமாக வங்கியின் 24 மணி நேர போன் பேங்கிங் நம்பரில் தொடர்பு கொண்டு, இண்டஸ்மொபைல்/இண்டஸ்நெட் / ஐவிஆர் அல்லது BLOCK <கிரிடிட் கார்ட் நம்பரின் கடைசி 4 இலக்கங்கள்> எழுதி 5676757 எண்ணிற்கு வங்கியுடன் பதிவு செய்துகொண்டிருக்கும் மொபைல் நம்பரிலிருந்து எஸ்எம்எஸ் அனுப்பிவிட வேண்டும், கார்டு தொலைந்து போனவுடன் தாமதமில்லாமல் இதைச் செய்ய வேண்டும். கார்டு தவறாகப் பயன்படுவதைத் தடுக்கும் விதமாக வங்கி அந்த கார்டை உடனே முடக்கி வைக்க ஆவன செய்யும். உள்ளூர் காவல் துறையிடம் முதல் தகவல் அறிக்கையை (எஃப்.ஐ.ஆர்.) கார்டுதாரர் பதிவு செய்ய வேண்டும். இது சம்பந்தமாக கார்டுதாரர் எழுத்துபூர்வ தகவல் ஒன்றையும் வங்கிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
  - முதல் தகவல் அறிக்கை நகல் பெற்றுக்கொண்ட அதிகாரியின் ரசீது அதில் இருக்க வேண்டும்
  - தொலைந்து போன நடவடிக்கைகள் / ஏற்கவியலாத நடவடிக்கைகளின் விவரங்கள் அடங்கிய கடிதம்
  - கார்டுதாரரிடமிருந்து காப்புறுதி கடிதம்
  - பாஸ்போர்ட் நகல்கள், ஒருவேளை சர்வதேச நடவடிக்கைக்கு மறுப்பு தெரிவிக்கும் பட்சத்தில்
  - இதர பிற ஆவணங்கள் வங்கிக்குத் தேவைப்படுவது போல் மற்றும் வங்கி திருப்தி அடையும் விதமாக.
  - வங்கி தன் சொந்த செலவில், காணாமல் / திருட்டு போயிருக்கும் கார்டுக்கு காப்பீடு பாலிசி ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் இது நிலவியல் வரம்புக்கு உட்பட்டதாக இருக்கும் மற்றும் பாலிசி ஆவணத்தில் இருக்கும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அடங்கியதாக இருக்கும்.

## மற்றவை

- நான்/நாங்கள் கொடுத்திருக்கும் அனைத்து விவரங்களும் உண்மையானவை என்று உறுதி அளிக்கிறோம். நான்/நாங்கள், கார்டுதாரர் (கார்டுதாரர்கள்) இதன் மூலம் தெளிவாக வங்கிக்கு கீழ்க்கண்ட அதிகாரங்களை வழங்குகிறோம் - கிரிடிட் கார்டு சரிபார்த்தல் அல்லது ஆய்வு செய்து பார்த்தல், அதன் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளுதல் போன்றவைகளுக்கு கார்டுதாரர் / இந்த ஒப்பந்தம் மற்றும் / அல்லது வேறு ஒப்பந்தங்கள் அல்லது கார்டுதாரர் தவணை தவறிய நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட அனைத்து / எந்த தகவல் / ஆவணங்களை இந்திய ரிசர்வ் வங்கி, வருமானத் துறை அதிகாரிகள், சட்ட அமலாக்கப் பிரிவு அதிகாரம், டிரைபூனல்கள், நீதிமன்றங்கள், வழக்குமன்றங்கள், இதர பிற வங்கிகள், கிரிடிட் பியூரே, நிதியியல் நிறுவனங்கள் அல்லது மூன்றாம் நபர்களிடம் எப்பொழுது வேண்டுமானாலும் பகிரிந்து கொள்ளலாம். இரகசியக்காப்பு உரிமை மற்றும் இரகசியக்காப்பு ஒப்பந்த உரிமைகளை நான்/நாங்கள் தளர்த்திக் கொள்கிறோம்.
- விண்ணப்பத்தில் அல்லது வேறு வழியில் கார்டுதாரர் கொடுத்திருக்கும் விவரங்களை விற்பனை நோக்கங்களுக்காகவும் கார்டு சம்பந்தப்பட்ட சலுகைகள் அளிக்கவும், இதில் பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர், இஎம்ஐ சலுகைகள், ரொக்கம் சார்ந்த சலுகைகள், காப்பீடு சேவைகள் போன்றவைகளுக்கு வங்கி



அவ்வப்போது பயன்படுத்திக் கொள்வதற்கு கார்டுதாரர் இதன் மூலம் சம்மதம் தெரிவித்துக் கொள்கிறார். பொருந்தும் விதிமுறைகளை அனுசரித்து வங்கி அவ்வப்போது அதன் மற்ற சேவைகளை விளம்பரப்படுத்தவும் இந்த விவரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- தொலைபேசி/அழைப்பு அல்லது நேரடி தொடர்பு அல்லது தபால் மூலமாக அல்லது வேறு வழிமுறைகளில் சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காகவும் வங்கி சரி என்று கருதுவது போல் இந்த விவரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கார்டுதாரர்(களுக்கு) அசௌகரியம் ஏற்படாத வகையில் வங்கி ‘கூப்பிட-வேண்டாம்’ பதிவேடு ஒன்றைப் பராமரித்து வருகிறது, கார்டுதாரர்(கள்) சத்தைப்படுத்தல் விளம்பரங்களுக்காக அழைப்புகளைப் பெற விரும்பாத பட்சத்தில், அவர்கள் தொடர்பு எண்களை ‘கூப்பிட-வேண்டாம்’ பதிவேட்டில் சேர்த்துக்கொள்ள கோரிக்கை செய்துகொள்ளலாம்.
- வணிக பழக்கவழக்கங்கள் மற்றும் பொருந்தும் நடைமுறைகளை அனுசரித்து கார்டுதாரர் விவரங்களை செயல்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது எதிர்கால கிரிடிட் பியூரேக்களுடன், வங்கி தீர்மானிப்பது போல் அவ்வப்போது பகிரிந்து கொள்வதற்கு கார்டுதாரர் சம்மதம் தெரிவிக்கிறார். இது போன்று கார்டுதாரரின் விவரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு முன்னர் கார்டுதாரருக்கு வங்கி முன்னறிவிப்பு எதுவும் தெரிவிக்கத் தேவையில்லை என்ற உரிமையை கார்டுதாரர் ஏற்றுக்கொள்கிறார், இவ்வாறு பகிரிந்துகொள்ளப்படும் விவரங்கள் கார்டுதாரரின் சீரிய அல்லது தவறான செயல்பாடுகள் / தவணை தவறுதல் குறித்தவையாக இருக்கலாம்.
- இந்திய நிதியியல் அமைப்பின் செயல்பாடுகள் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் கிரிடிட் இன்ஃபர்மேஷன் பியூரோ ஆஃப் இந்தியா (சிஐபிஐஎல்) இந்திய அரசு மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) இணைந்து நிறுவியிருக்கும் ஓர் அமைப்பு ஆகும், வெவ்வேறு நிறுவனங்களிலிருந்து தங்களுக்குத் தோதான கடன் வசதிகளை கார்டுதாரர்கள் பெற்று பயனடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கிடையே தகவல் பரிமாற்றம் பலனளிக்கும் முறையில் பகிர்ந்துகொள்ளப்பட உதவும் வகையில் ஆர்பிஐ இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது.
- இந்த முயற்சியில் பங்கேற்றிருக்கும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அனைத்தும் கார்டுதாரர்களின் தரவுகளை சிஐபிஐஎல் அமைப்புடன் பகிர்ந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றன. ஆகையால், கார்டுதாரர்களின் கணக்கு தரவுகளை இண்டஸ்இண்ட் பேங்க் சிஐபிஐஎல் அமைப்புடன் பகிரிந்துகொள்ளும் என்று கார்டுதாரருக்கு வங்கி தெரிவித்துக் கொள்கிறது. வழக்கமான இடைவெளிகளில் கார்டுதாரர்களின் அனைத்து தரவுகளும் புதுப்பிக்கப்படும் என்பதால் இந்த வகையில் கார்டுதாரர்கள் வங்கிக்கு தொடர்ந்து அளித்துவரும் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுக்கு வங்கி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.
- இணை-பிராண்டிங் ஏற்பாடுகளின் கீழ் வருவாய்/கட்டணத்தை இணை-பிராண்ட் பார்ட்னருடன் பகிர்ந்து கொள்ளலாம்.